# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
## முதலாந்தவணைப் பரீட்சை - 2019
## தமிழ்

பெயர் :............................ தரம் - 5 நேரம்: 1மணி30நிமிடம்

**1) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக**

தசரத மன்னன் கோசல நாட்டை ஆண்டு வந்தான். இவனது நாட்டின் தலைநகர் அயோத்தி. தசரத மன்னனுக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை எனும் மூன்று மனைவியர் இருந்தனர். இவன் தனக்கு நீண்ட காலமாகக் குழந்தைச் செல்வம் இல்லாததால் மிகவும் வருத்தமுற்றான். தசரதன் தனது குருவான வசிட்ட முனிவரின் ஆலோசனைப்படி புத்திரப் பேற்றை விரும்பி யாகஞ் செய்தான்.

1. கோசல நாட்டை ஆண்ட மன்னன் யார்?

...........................................................................................................

2. கோசல நாட்டின் தலைநகர் எது?

...........................................................................................................

3. தசரதனின் குரு யார்?

...........................................................................................................

4. மழலைச் செல்வம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக

...........................................................................................................

5. உயர்திணை ஆண்பால் ஒருமை வினைமுற்று ஒன்று எழுதுக

...........................................................................................................

6. பந்தியில் இடம் பெற்றுள்ள நிறுத்தற் குறிகள் எவை?

...........................................................................................................

7. கீழ்க்கால், விசிறி, சங்கிலிக்கொம்பு கொண்டமைந்த சொல்லை எழுதுக

...........................................................................................................

(7 புள்ளி)

**2) சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. நான் பாடசாலைக்குச் சென்றேன். இதில் நான் என்பது
   1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை
2. "க" இயல்பொலியாக அமைந்த சொல்
   1. காகம் 2. கட்டில் 3. முகம்
3. நூலகம் என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறி
   1. மடக்கேறு 2. அரவு 3. மடக்கேறும் அரவும்
4. ஒருவர் தானே தன் கதை கூறுதல் என்பதன் தனிச்சொல்
   1. சுயவிபரம் 2. சுயசரிதை 3. சுயவிவரக் கோவை
5. தங்கை அழகிய வீடு கட்டினாள். இங்கு தங்கை என்பது
   1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள்

(10 புள்ளி)

kalvi.lk

**3) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுக**

1. தொழிற்சாலை/கடதாசித்/இருக்கிறது/வாழைச்சேனையில்

.......................................................................................................

2. கட்டு/கந்தையானாலும்/கசக்கிக்

.......................................................................................................

(4 புள்ளி)

**4) பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக**

ஆசிரியர்கள் பாடசாலைக்குப் போனார்கள்

மாணவர்கள் பாடசாலைக்குப் போனார்கள்

.......................................................................................................

( 2 புள்ளி)

**5) பின்வரும் தொடர் வாக்கியத்தை தனிவாக்கியங்களாக எழுதுக**

பாலைக் குடித்தவுடன் குழந்தையின் களைப்பும் தாகமும் நீங்கின

1. .......................................................................................................

2. .......................................................................................................

(4 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

**6) பழமொழியின் கருத்தை எழுதுக**

1. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்

.......................................................................................................

2. ஆனைக்கொருகாலம் பூனைக்கொரு காலம்

.......................................................................................................

(4 புள்ளி)

**7) பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக**

1. அகடவிகடம் - .......................................................................................

2. இலவுகாத்த கிளி - ...................................................................................

(4 புள்ளி)

**8) சரியாக எழுதப்பட்ட சொலலின் கீழ்க் கோடிடுக**

1. 1) இளனி 2) இளநீர் 3) இளனீர்

2. 1) காச்சல் 2) காய்ச்சல் 3) காய்சல்

3. 1) எண்ணெய் 2) எண்ணை 3) எண்ணைய்

(6 புள்ளி)

kalvi.lk

9) பின்வரும் சுருக்கக் குறியீடு உணர்த்தும் கருத்தை எழுதுக

1. இ.ஒ.கூ - ......................................................................................................................................

2. இ.மி.ச - ......................................................................................................................................

(4 புள்ளி)


10) பொருத்தமான நிறுத்தற்குறி இடுக


1. நல்லது பாபு நீ இனிப் போகலாம்

2. அறிவு வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாதது

(2 புள்ளி)

11) பின்வரும் குறியீடுகள் உணர்த்தும் கருத்தை எழுதுக





..........................................................

..........................................................

(4 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

12) பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான இரட்டைக்கிளவிச் சொல்லை தெரிவு செய்து எழுதுக

(குளுகுளு, படபட, கடகட)

1. வெடிகள் ........................................................ வென்று வெடித்தன

2. காற்று ........................................................ என்று வீசியது

3. பானைகள் ........................................................ வென்று உருண்டன

(6 புள்ளி)

13) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான இணைமொழிச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக

(நன்மைதீமை, மேடுபள்ளம், சீரும் சிறப்புமாக)

1. அவர்கள் ........................................................ வாழ்ந்து வந்தனர்

2. வாழ்க்கை ........................................................ நிறைந்தது

3. அவர்கள் ........................................................ களில் பங்குபற்றினர்.

(6 புள்ளி)

14) சேர்த்தெழுதுக

1. மூன்று + நூறு = ........................................................

2. தேயிலை + நீர் = ........................................................

3. மக்கள் + பேறு = ........................................................

(6 புள்ளி)

kalvi.lk

**15) பிரித்தெழுதுக**

1. வடகிழக்கு = ..................................................................
2. காவியுடை = ..................................................................
3. மரணமடைந்தார் = ..................................................................

(6 புள்ளி)

**16) வினா வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. இலங்கை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு சுதந்திரம் பெற்றது

.....................................................................................................................................

(2 புள்ளி)

**17) விடுகதைக்கு விடை தருக**

உயிரில்லாத நீதிபதி உரியதீர்ப்பு வழங்குவார் அவர் யார்?

.....................................................................................................................................

(2 புள்ளி)

**18) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. எமது வாழ்வில் சுகமாக வாழ எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்?

.....................................................................................................................................

2. சிபிச்சக்கரவர்த்தியின் சிறந்த குணத்தைச் சோதிக்க விரும்பியவர்கள் யாவர்?

.....................................................................................................................................

3. சுத்தத்தை வலியுறுத்தும் பழமொழி ஒன்றை எழுதுக?

.....................................................................................................................................

4. காந்தியடிகள் பிறந்த ஊர் எது?

.....................................................................................................................................

5. "பூ இலங்கும் பொழில் இலங்கும் பொன் இலங்கும்" என்ற பாடலைப் பாடியவர் யார்?

.....................................................................................................................................

(10 புள்ளி)

**19) ஆண்பால் வாக்கியத்தினை பெண்பால் வாக்கியமாக எழுதுக**

1. உழவன் வயலை உழுதான்

.....................................................................................................................................

2. அரசன் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான்

.....................................................................................................................................


(4 புள்ளி)

**20) உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்பது தொடர்பாக மூன்று வாக்கியங்கள் எழுதுக**

1. .....................................................................................................................................
2. .....................................................................................................................................
3. .....................................................................................................................................

(6 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

Education
கல்வி
අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page